ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1992/21 - 2016 නොවැම්බර් මස 09 වැනි බදාදා - 2016.11.09

1992/21 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 09 ஆந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**கணக்காய்வு பரீட்சகர் சேவை தொடர்பான சேவைப் பிரமாணக் குறிப்பின்**
**6 (i) ஆம் பந்தியினைத் திருத்துதல்**

1985, திசெம்பர் 20 ஆந் திகதிய 380/61 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட கணக்காய்வு பரீட்சகர் சேவையின் சேவைப்பிரமாணக் குறிப்பின் 6(i) ஆம் பந்தி அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் திருத்தியமைக்கப்பட்டுள்ளதுடன், திருத்தப்பட்ட பந்தி அறிந்துகொள்வதற்காக பிரசுரிக்கப்படுகின்றது.

இத் திருத்தம் 2007.09.11 ஆந் திகதியிலிருந்து அமுலுக்கு வரும்.

எச்.எம். காமினி செனவிரத்ன,
செயலாளர்,
அரசாங்க சேவைகள் ஆணைக்குழு.

அரசாங் சேவைகள் ஆணைக்குழு அலுவலகம்,
இல. 177, நாவல வீதி,
நாரஹேன்பிட,
கொழும்பு 05,
2016, நவம்பர் 3.

**கணக்காய்வு பரீட்சகர் சேவை தொடர்பான சேவைப் பிரமாணக் குறிப்பின்**
**6 (i) ஆம் பந்தியினைத் திருத்துதல்**

1985, திசெம்பர் 20 ஆந் திகதிய 380/61 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட கணக்காய்வு பரீட்சகர் சேவையின் சேவைப்பிரமாணக் குறிப்பின் 6(i) ஆம் பந்தி அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் திருத்தியமைக்கப்பட்டுள்ளதுடன், திருத்தப்பட்ட பந்தி அறிந்துகொள்வதற்காக பிரசுரிக்கப்படுகின்றது.

“6(i) ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள பின்வரும் தகைமைகளைப் பூரணப்படுத்தியுள்ள கணக்காய்வு பரீட்சகர் சேவையின் II ஆம் தரத்திலுள்ள உத்தியோகத்தர்களினால் உரிய படிவத்திற்கமைய கோரிக்கையொன்று சமர்ப்பிக்கப்படும் பட்சத்தில் நியமன அதிகாரியினால் தகைமைகள் பரிசோதிக்கப்பட்டதன் பின்னர் I ஆம் தரத்திற்கு பதவியுயர்த்தப்படுவர்.

I. நியமனம் நிரந்தரமாக்கப்பட்டிருத்தல்

II. சேவையின் II ஆம் தரத்தில் குறைந்தபட்சம் பத்து (10) வருடங்கள் தொடர்ச்சியானதும் திருப்திகரமானதுமான சேவைக் காலத்தினை பூரணப்படுத்தியிருத்தல் மற்றும் பத்து (10) சம்பள ஏற்றங்களை ஈட்டியிருத்தல்.

III. அங்கீகரித்த செயலாற்றல் மதிப்பீட்டு நடைமுறைக்கமைய பதவியுயர்வுத் திகதிக்கு முன்னரான பத்து (10) ஆண்டு காலத்தினுள் திருப்திகரமான நிலை அல்லது அதற்கு மேற்பட்ட செயலாற்றலை காண்பித்திருத்தல்.

IV. பதவியுயர்வுத் திகதிக்கு முந்திய ஐந்து (05) ஆண்டு காலத்தினுள் திருப்திகரமான சேவைக் காலத்தை பூரணப்படுத்தியிருத்தல்.

V. குறித்த நிலைக்குரிய ஏனைய அரச கரும மொழியில் தேர்ச்சியினைப் பெற்றிருத்தல்.

VI. குறித்த வினைத்திறன்காண் தடைப் பரீட்சையில் உரிய திகதியில் சித்தியடைந்திருத்தல்.

*11- 1075*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.